மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கடலாடி.
முன்னிலை: திரு. நா. வெங்கடேசன், D.C.,B.A.,M.L.,PGDCLCF.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கடலாடி.
2023-ம் ஆண்டு ஜுலை திங்கள் 20ம் நாள் வியாழக்கிழமை

**I.A.No. 03/2023**
**in**
**O.S. No.29/2021**

1. கண்ணன்
2. செந்தில்குமார்
3. ராமமூர்த்தி
4. பஜுருல் ரகுமான்
5. மாரிமுத்து ...மனுதாரர்/4 முதல் 8 பிரதிவாதிகள்

**/எதிர்/**

1. பூமயில்
2. பேச்சியம்மாள்
3. சார்பதிவாளர் அவர்கள்,
   சாயல்குடி.
4. தமிழக அரசு அதன் மாவட்ட பிரதிநிதிகளில்
   ஒருவரான இராமநாதபுரம் மாவட்ட
   ஆட்சித்தலைவர் மூலமாக ... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 18.07.2023ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.சௌந்திரபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்குரைஞர்கள் திரு.J.உதுமான், B.பூமுருகன், M.சக்திவேல், T.முனீஸ்வரன், RBS.முகிலரசன், U.ஜெய்தத்துல் பாத்திமா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும், 2ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் 18.07.2023ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிர் மனு இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டதாலும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு

மனுதாரர்கள்/4 முதல் 8 பிரதிவாதிகள் மற்றும் 1வது எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

1) மனுதாரர்கள் தரப்பில் வாதியின் வழக்கினை மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் வழக்குரையை தள்ளுபடி (Reject) செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/4 முதல் 8 பிரதிவாதிகளால் சி.பி.சி.ஆர்டர் 7 ரூல் 11–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்கள்/ 4 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

இந்த வழக்கில் தாவா சொத்து குறித்து வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தனது மகளான 1ம் பிரதிவாதிக்கு யாருடைய நிர்பந்தமும் இன்றி கடந்த 10.10.2017ம் தேதியன்று ஆவண எண்.938/2017 என்னும் இனாம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து சொத்தின் சுவாதினத்தையும் ஒப்படைத்து விட்டதாகவும், அதற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.124/15 கூட்டு பட்டா ஏற்படுத்தி அனுபவம் செய்து வந்ததாகவும், 1ம் பிரதிவாதி தாவா சொத்தை 4ம் பிரதிவாதிக்கு சரியான மறுபயனுக்காக கடந்த 28.02.2022ம் தேதியன்று கிரைய பத்திரப்படி செய்து கொடுத்து சுவாதினத்தையும் ஒப்படைத்து விட்டதாகவும், 4ம் பிரதிவாதி தாவா சொத்தில் நடுப்புறம் 20 செண்ட் நிலத்தை 6ம் பிரதிவாதிக்கு கடந்த 30.03.2022ம் தேதி பதிவு ஆவண எண்.470/2022ன் படி கிரைய பத்திரபடி கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், மேலும் 5ம் பிரதிவாதிக்கு 13 சென்ட் அளவுள்ள சொத்தினை ஆவண எண்.467/2022ன் படி கிரையம் செய்து கொடுத்து விட்டதாகவும், 4ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.477/2022ன் படி 20 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், 6ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் தென்புறத்தில் 10 சென்ட் அளவுள்ள சொத்தினை 8ம் பிரதிவாதிக்கு

01.04.2022ம் தேதி கிரையம் கொடுத்து சொத்தினை ஒப்படைத்து மேற்கூறியவர்கள் தனித்து அனுபவம் செய்து வருவதாகவும், வாதி தனது மகனின் தூண்டுதலின் படி 22.04.2021ம் தேதி உண்மையான விபரங்களை மறைத்து பொய்யாக காரணம் கூறி வாதி 10.10.2017ம் தேதியிட்டு ஏற்படுத்தி இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றும், வாதி 1ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து சட்ட காலம் கடந்து தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் மனுவின் சுருக்கம்</u>:–

தாவா சொத்து 1ம் எதிர்மனுதார்/வாதிக்குப் பாத்தியப்பட்டது என்றும், இந்த 1ம் எதிர்மனுதார்/வாதியை ஏமாற்றி இந்த 1ம் எதிர்மனுதார்/வாதியின் மகளான பேச்சியம்மாள் என்பவர் மோசடியாக கடந்த 10.10.2017ம் தேதி ஆவண எண்.938/2017 ஆவணத்தை ஏமாற்றி பெயரளவிற்கு எழுதி வாங்கிக்கொண்டுள்ளார் என்றும், அந்த விபரம் தெரிந்தவுடன் 1ம் எதிர்மனுதார்/வாதி சமூகம் நீதிமன்றத்தில் 2021ம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்து அந்த ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளார் என்றும், மேலும் இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதியை தாவாச் சொத்தை யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளார் என்றும் அதன் தொடர்ச்சியாக மனுவும் தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் அதற்கு பின்பாக இவ்வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதியிடம் தாவாச் சொத்தினுடைய சுவாதீனம் இல்லாத நிலையிலும் தாவாச் சொத்தானது வாதியினுடைய கைவச அனுபவத்திலேயே உள்ள நிலையிலும் அதை மறைத்து 1ம் பிரதிவாதி தாவாச் சொத்துக்கு கூட்டுப்பட்டா பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது என்றும் தாவாச் சொத்து சம்பந்தமாக 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கூட்டுப்பட்டா எண். 12415 உள்ள பட்டா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதனடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் எவ்வித உரிமையும் ஏற்படத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கு நிலுவையில் உள்ள போது தாவாச் சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதி வேண்டுமென்றே தாவாச் சொத்தை

வில்லங்கப்படுத்தி வைக்கவேண்டும் என்று சொல்லி கடந்த 28.02.2022ம் தேதி பெயரளவிற்கு 4ம் பிரதிவாதிக்கு ஒரு கிரைய ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும், மேலும் அதனடிப்படையில் 4ம் பிரதிவாதி தனது செல்வாக்கைப் பயன்படுத்தி தாவாச் சொத்துக்கு தன் பெயருக்கு பட்டா எண்.12839 ஏற்படுத்தியுள்ளார் என்றும், அந்த வகையில் 4ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஆவணமோ, பட்டாவோ, சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் அதனடிப்படையில் 4ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் எந்தவித உரிமையும் ஏற்படவில்லை என்றும், இவ்வாறு வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் பிரதிவாதி இவ்வழக்கில் கண்ட 4ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் கொடுத்து சட்டப்படி செல்லாத நிலையில் 4ம் பிரதிவாதி தான் 1ம் பிரதிவாதியிடம் பெயரளவிற்கு கிரையம் வாங்கிய தாவாச் சொத்தின் நடுப்புறம் 20 செண்டு நிலத்தை இவ்வழக்கில் கண்ட 6ம் பிரதிவாதியான இராமமூர்த்தி என்பவருக்கு கடந்த 30.03.2022ம் தேதி ஆவண எண்.470/2022 ஆவணம் மூலமாக பெயரளவிற்கு கிரைய ஆவணம் ஏற்பட்டது போல ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார்கள் என்றும், அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அதனடிப்படையில் தாவாச் சொத்தில் எப்பகுதியிலும் 6ம் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் ஏற்படவில்லை என்றும், அதே போல இவ்வழக்கில் கண்ட 4ம் பிரதிவாதி இவ்வழக்கில் கண்ட 5ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தில் 13 செண்ட் நிலத்தை ஆவண எண்.647/2022 ஆவணம் மூலமும் அதே போல 7ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.477/2022 ஆவணம் மூலமும் கிரையம் கொடுத்தது போல ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளார் என்றும், அந்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் கண்ட 5 மற்றும் 7ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தின் எப்பகுதியிலும் உரிமை ஏற்படவில்லை, அனுபவமும் ஏற்படவில்லை என்றும் அந்த ஆவணங்களும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேலும் இவ்வழக்கில் கண்ட 6ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்து சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ள போது 10 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்தது போல கடந்த 04.04.2022ம் தேதி ஒரு கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார்கள் என்றும் அந்த ஆவணத்தின் அடிப்படையில் 8ம் பிரதிவாதி சொத்தின் எப்பகுதியையும் அனுபவம் செய்யவுமில்லை என்றும், மேற்படி ஆவணத்தின் மூலமாக 8ம் பிரதிவாதிக்கு தாவாச் சொத்தின் எப்பகுதியிலும்

எவ்வித உரிமையும் ஏற்படவும் இல்லை என்றும், இது சம்பந்தமாக வாதியால் புகார் கொடுக்கப்பட்டு மேற்படியார்கள் மீது குற்றவழக்கும் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இவ்வழக்கில் கண்ட வாதி தன் மகனுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் உயில் எழுதி வைக்க தன் விருப்பத்தை 1ம் பிரதிவாதியிடம் தெரிவித்த நிலையில் அதனைப் பயன்படுத்திக் கொண்ட 1ம் பிரதிவாதி வாதியை ஏமாற்றி தன் பெயருக்கு மோசடியாக இனாம்செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்து கொண்டுள்ளார் என்றும், அந்த இனாம்செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு சாட்சிக் கையெழுத்து போடுவதற்கு தூத்துக்குடியிலிருந்து ஆட்களை கூட்டி வந்து சாட்சிக் கையொப்பம் போட்டு இனாம்செட்டில்மெண்ட் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்றும், இந்த விபரம் தெரிந்த வாதி, 1ம் பிரதிவாதி பெயரில் 1ம் பிரதிவாதி வாதியை ஏமாற்றி மோசடியாக பதிவு செய்த ஆவணத்தை ரத்து செய்யவும், அதன் பின்னிட்டு 4 முதல் 8 பிரதிவாதிகள் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் செல்லாது எனவும் பரிகாரங்கள் கோரி இவ்வழக்கை நடத்தி வருகிறார் என்றும், வாதி இவ்வழக்கில் பொய்யாக எந்தவிபரத்தையும் கூறி இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும், வாதியை ஏமாற்றி கடந்த 10.10.2017ம் தேதி 1ம் பிரதிவாதி எழுதி வாங்கிய இனாம்செட்டில்பெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், சாயல்குடியில் வாழ்ந்து வரும் வாதி தூத்துக்குடியிலிருந்து சாட்சிகளை கூட்டி வந்து 1ம் பிரதிவாதிக்கு இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்பது உண்மையில்லை என்றும், 1ம் பிரதிவாதி திட்டமிட்டு வாதியை ஏமாற்றி அழைத்துச் சென்று கடந்த 10.10.2017ம் தேதி தன் பெயரில் மோசடியாக இனாம்செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளார் என்றும், அந்த வகையில் அந்த ஆவணம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், அவிடவிட்டு பாரா 4ல் கண்ட விபரங்கள் அனைத்தும் திட்டவட்டமாக மறுத்து ஆட்சேபிக்கப்படுகிறது என்றும், 1ம் பிரதிவாதிக்கு வாதி மனமுவந்து கடந்த 10.10.2017ம் தேதி எந்தவிதமான இனாம்செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், உண்மையில் வாதியை ஏமாற்றி 1ம் பிரதிவாதி மோசடியாக கடந்த 10.10.2017ம் தேதி வாதி தன்னிச்சையாக இனாம்செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தது போல தன் வகையாட்களை சரி செய்து வாதியை ஏமாற்றி ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளார் என்றும், வாதி தாவாச்

சொத்தின் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதியிடம் எப்போதும் ஒப்படைக்கவில்லை என்றும், தாவாச் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு வாதி இனாம்கொடுப்பதற்கு எந்த எண்ணமும் கிடையாது என்றும், கடந்த 10.10.2017 ம் தேதியில் தாவாச் சொத்தை 1ம் பிரதிவாதி சுவாதீனம் அடையவேயில்லை என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரை தாவாச் சொத்துக்கான பட்டா வாதி பூமியில் பெயரிலேயே பதிவில் இருந்து வந்தது என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பாக 1ம் பிரதிவாதி தன் செல்வாக்கை பயன்படுத்தி தாவாச் சொத்துக்கான பட்டாவை தன் பெயரில் மாற்றம் செய்து கொண்டு தாவாச் சொத்து சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளதை மறைத்து தாவாச் சொத்தை 4 முதல் 8 பிரதிவாதிகளுக்கு வில்லங்கப்படுத்தியுள்ளார் என்றும், அந்த ஆவணங்கள் சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், மேலும் வாதியை 1ம் பிரதிவாதி மோசடியாக ஏமாற்றி தன் பெயரில் கடந்த 10.10.2017 ம் தேதி இனாப்பெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கிக்கொண்டுள்ளார் என்பது வாதிக்கு கடந்த 12.04.2021ம் தேதி தெரியவந்தவுடன் இந்த வழக்கானது உடனடியாக கடந்த 19.04.2021ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே வாதி சட்டகாலம் கடந்து இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்பது உண்மையில்லை என்றும், அதற்காக இவ்வழக்கை ரிஜக்ட் செய்யவேண்டும் என்ற மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும், இம்மனுவில் கண்ட மனுதார்கள் தங்கள் மனுவில் ஏன் இவ்வழக்கை சமூகம் நீதிமன்றம் ரிஜக்ட் செய்யவேண்டும் என்பதற்கு சரியான காரணம் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை. உண்மையில் காலவரையறைச் சட்டம் 1963, Article 59–60 என்று சொல்லப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதி எழுதி வாங்கிய இனாம்செட்டில்மெண்ட் ஆவணம் அந்த வகையில் வாதியை ஏமாற்றி 10.10.2017 தேதியிட்ட பற்றி வாதிக்கு தெரியவந்த 3 ஆண்டுகளுக்குள் அதாவது அந்த விபரம் வாதிக்கு தெரிய வந்த 12.04.2021ம் தேதியிலிருந்து 19.04.2021ம் தேதிக்குள் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோரி வாதியால் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் வாதியின் வழக்கை காலவரையறைக்காக ரிஜக்ட் செய்யவேண்டும் என்று மனுதார்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், இவ்வழக்கில் கண்ட வாதிக்கு தற்போது

78 வயது ஆகிறது. எனவே இந்த வழக்கில் வாதி சார்பில் உயர்நீதிமன்ற உத்தரவின்படி வழக்கை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துவரும் நிலையில் வாதியினுடைய வயோதிகத்தை மனதில் வைத்துக்கொண்டு இவ்வழக்கை நடத்த விடாமல் காலம் கடத்தினால் வாதிக்கு தன் வழக்கை நடத்துவதற்குரிய நினைவாற்றல் இல்லாமல் போய்விடும் என்பதற்காகவோ, அல்லது வாதியினுடைய வயோதிக நிலையில் வாதிக்கு ஏதேனும் ஏற்பட்டு அதனால் இவ்வழக்கை நடத்த விடாமல் செய்து விடலாம் என்பதற்காக திட்டமிட்டு இவ்வழக்கை இழுத்து கடத்தவேண்டும் என்பதற்காக பொய்யான விபரங்களைச் சொல்லி இம்மனுவானது சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4) இம்மனு மனுதாரர்கள்/ 4 முதல் 6 பிரதிவாதிகள் கோரியவாறு அனுமதிக்கத்தக்கதா?

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இந்த வழக்கில் தாவா சொத்து குறித்து வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தனது மகளான 1ம் பிரதிவாதிக்கு யாருடைய நிர்பந்தமும் இன்றி கடந்த 10.10.2017ம் தேதியன்று ஆவண எண்.938/2017 என்னும் இனாம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து சொத்தின் சுவாதினத்தையும் ஒப்படைத்து விட்டதாகவும், அதற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண்.124/15 கூட்டு பட்டா ஏற்படுத்தி அனுபவம் செய்து வந்ததாகவும், 1ம் பிரதிவாதி தாவா சொத்தை 4ம் பிரதிவாதிக்கு சரியான மறுபயனுக்காக கடந்த 28.02.2022ம் தேதியன்று கிரைய பத்திரப்படி செய்து கொடுத்து சுவாதினத்தையும் ஒப்படைத்து விட்டதாகவும், 4ம் பிரதிவாதி தாவா சொத்தில் நடுப்புறம் 20 செண்ட் நிலத்தை 6ம் பிரதிவாதிக்கு கடந்த 30.03.2022ம் தேதி பதிவு ஆவண எண்.470/2022ன் படி கிரைய பத்திரபடி கிரையம்

செய்து கொடுத்துள்ளதாகவும்,

மேலும் 5ம் பிரதிவாதிக்கு 13 சென்ட் அளவுள்ள சொத்தினை ஆவண எண்.467/2022ன் படி கிரையம் செய்து கொடுத்து விட்டதாகவும், 4ம் பிரதிவாதி 7ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.477/2022ன் படி 20 செண்ட் நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், 6ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் தென்புறத்தில் 10 சென்ட் அளவுள்ள சொத்தினை 8ம் பிரதிவாதிக்கு 01.04.2022ம் தேதி கிரையம் கொடுத்து சொத்தினை ஒப்படைத்து மேற்கூறியவர்கள் தனித்து அனுபவம் செய்து வருவதாகவும்,

வாதி தனது மகனின் தூண்டுதலின் படி 22.04.2021ம் தேதி உண்மையான விபரங்களை மறைத்து பொய்யாக காரணம் கூறி வாதி 10.10.2017ம் தேதியிட்டு ஏற்படுத்தி இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தில் 1ம் பிரதிவாதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்றும், வாதி 1ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதி கொடுத்து சட்ட காலம் கடந்து தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என மனுதாக்கல் செய்து மனுதாரர் தரப்பு வாதத்தை முன்வைத்துள்ளார்.

1ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் எதிருரை தாக்கல் செய்து தனது எதிர் வாதத்தினை இந்நீதிமன்றத்தில் முன் வைத்துள்ளார். அதன்படி பார்கையில் அவிடவிட்டு பாரா 3ல் கண்ட விபரங்கள் அனைத்தும் திட்டமாக மறுத்து ஆட்சேபிக்கப்படுகிறது. உண்மையில் இவ்வழக்கில் கண்ட வாதி தன் மகனுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் உயில் எழுதி வைக்க தன் விருப்பத்தை 1ம் பிரதிவாதியிடம் தெரிவித்த நிலையில் அதனைப் பயன்படுத்திக் கொண்ட 1ம் பிரதிவாதி வாதியை ஏமாற்றி தன் பெயருக்கு மோசடியாக இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்து கொண்டுள்ளார். அந்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு சாட்சிக் கையெழுத்து போடுவதற்கு தூத்துக்குடியிலிருந்து ஆட்களை கூட்டி வந்து சாட்சிக் கையொப்பம் போட்டு இனாம் செட்டில்மெண்ட் ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார் என்று கூறியுள்ளார்.

இதன்படி பார்க்கையில் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கும், 4ம் பிரதிவாதி 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கும், 6ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதிக்கும் தொடர்

ஆவணங்கள் ஏற்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளதாக மனு மற்றும் எதிர்மனுவின் மூலம் காணப்படுகிறது. இவ்வழக்குரையானது காலதாமதத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று மனுதாரரின் வாதத்தை பார்க்கையில் எதிர்மனுதாரர் இந்த வழக்கு குறித்து வாதி 1ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக ஏற்படுத்தியதாக 10.10.2022ம் தேதியிட்ட இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து வாதிக்கு கடந்த 12.04.2021ம் தேதிதான் தெரிய வந்ததாகவும், இந்த வழக்கானது 19.04.2021ல் தெரிந்தவுடன் தாக்கல் செய்ததாகவும், 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ள நிலையில் இந்த வழக்கு கால வரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா என்று பார்கையில்,

மனுதாரரின் கூற்றானது காலவரையறை தோஷத்தால் சட்ட காலம் முடிந்து இந்த வழக்குரை தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர் கூறியிருப்பதையும், 1ம் எதிர்மனுதாரர் தனக்கு கடந்த 12.04.2021ம் தேதிதான் 10.010.2022ம் தேதி இனாம் செட்டில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்பது தெரிந்ததாகவும், கூறியிருப்பதில் காலவரையறை என்பது பொருண்மையும், சட்டமும் சார்ந்த தொகுப்பாக காணப்படுவதால் அதனையும், வழக்கின் இறுதி விசாரணையின் மூலம் தான் காணமுடியும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கூறிய வினாவிற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு ஆதரவாகவும், மனுதாரருக்கு எதிராகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

**இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 20.07.2023 இன்று அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

**இல்லை**

**<u>எதிர்மனுதாரர்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

**இல்லை**

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.